30th September 1958]

அபிப்பிராயப்படுகிறது. அவ்வாறே பெரிய கிராமங்களில் பள்ளிக்கூடங்களை சர்க்கார் அமைத்து வருகிறது. அவ்வாறு அமைக்கும்போது, சிறு குழந்தைகள் அவர்களுடைய வீடுகளிலிருந்து பள்ளிக்கூடங்களுக்குப் போகும்போது நடக்கவேண்டிய தூரம் ஒரு மைலுக்கு மேற்படாயல் இருக்கும் முறையில் அவைகளை அமைப்பதற்குச் சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறது.

Primary Health Centres.

* 634 *Q.*—Sri M. C. MUTHUKUMARASWAMY : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

1957–58-ல் தஞ்சை ஜில்லாவில், தாலூகாவாரியாக, திறக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

The Hon. Sri M. A. MANICKAVELU : A paper[a] is placed on the table of the House.

Sri M. C. MUTHUKUMARASWAMY : இந்தப் பதிலைப் பார்க்கும்போது, பிரைமரி ஹெல்த் ஸெண்டர்கள் தஞ்சாவூர் ஜில்லாவில் அதிகமாக இல்லை என்று தெரிகிறது. அது ஒரு புறமிருக்க, பிரைமரி ஹெல்த் ஸெண்டர்களில் வேலை பார்க்கும் ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள் ஒரு இலாகாவைச் சேர்ந்தவர்களாகவும், டாக்டர்கள் வேறொரு இலாகாவைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கிறார்கள் ; இதன் காரணமாக, அந்த நிலையங்கள் சம்பந்தமாக ஏதாவது குறைகூறப்படும்போது இரு உத்தியோகஸ்தர்களும் ஒருவரையொருவர் குற்றம் சாட்டுகிறார்கள். எனவே, இந்த இரு இலாகாக்களையும் ஒரே இலாகாவின் கீழ் கொண்டுவர சர்க்கார் முயற்சிக்குமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : பிரைமரி ஹெல்த் ஸெண்டர்களில் ஒரு திட்டப்படி வேலை நடக்கிறது. எதை மாற்ற வேண்டுமென்று கனம் அங்கத்தினர் கூறுகிறார் என்று எனக்கு இன்னும் சரியாக விளங்கவில்லை. ஆகையால் கனம் அங்கத்தினர் தாம் கூறுவதை எனக்கு எழுதி அனுப்பினால், கவனிக்கிறேன்.

Irrigation tanks

* 635 *Q.*—Sri M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state with reference to the answer given to the starred question No. 268, on 10th March 1958 the nature of further action taken in the matter of providing irrigation tanks for the villages of Kanthadu and Kottikuppam in the Tindivanam taluk, South Arcot district?

The Hon. Sri P. KAKKAN : The Executive Engineer, South Arcot Division, has sent two estimates to the Collector of South Arcot district for his concurrence regarding the food value and the additional revenue for the formation of two tanks in Kottikuppam village and one tank in Kanthadu village. The Collector has referred the matter to the Assistant Collector, Tindivanam. The Collector is awaiting the report from the Assistant Collector for according his concurrence.

Sri M. JAGANNATHAN : கொட்டிக்குப்பம், காந்தடு கிராமங்களில் நீர்ப்பாசன வசதி அளிக்கக்கூடிய ஏரிகள் இல்லாததால் அங்குள்ள விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அங்கே ஏரிகளை அமைக்கும் வேலைகளை துரிதமாகச் செய்வதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க சர்க்கார் முன்வருவார்களா ?

---

[a] Printed as Appendix II on page 1125 infra.